Dinamalar News: 05.07.2025

என அவர் தெரிவித்தார்.

# இந்திரா காந்தி தேசிய திறந்தநிலை பல்கலை மையத்தில் மாணவர் சேர்க்கை தொடங்கியது

**ஓசூர், ஜூலை 5–**

ஓசூர் அருகே கோனேரிப்பள்ளியில் உள்ள இன்ஜினியர் பெருமாள் மணிமேகலை (பி.எம்.சி.டெக்) பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில், புதுடெல்லி இந்திராகாந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் படிப்பு மையம் 20 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தின் இந்த கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இதில் இளங்கலைப் படிப்புகளான பிஏ, பிஎஸ்சி, பிகாம், பி.எஸ்.டபுள்யூ, பிசிஏ மற்றும் முதுநிலைப் படிப்புகளான எம்ஏ, எம்காம்., எம்.எஸ் டபுள்யூ, எம்ஏ(சைக்காலஜி) எம்சிஏ, எம்பிஏ படிப்புகளில் இந்த கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடந்து வருகிறது.

மேலும் 6 மாத சான்றிதழ் படிப்புகளும் மையத்தில் செயல்படுவதால், அதற்கான மாணவர் சேர்க்கையும் நடந்து வருகிறது. அனைத்து படிப்புகளும் (எஸ்சி/ எஸ்டி) மாணவர்கள் 50 சதவீதம் சேர்கை கட்டணம் மட்டும் செலுத்தி படிக்கலாம். எந்தவித வயது வரம்பும் இல்லை. வீட்டிலிருந்தோ, வேலை செய்யும் இடத்திலிருந்தோ பாட பிரிவுகளில் சேர்ந்து தொலை தூர கல்வியாக படிக்கலாம்.

இந்த சேர்க்கையானது இணைய தளம் (https://ignouadmission.samarth.edu.in/) மூலம் மட்டுமே பதிவு செய்ய வேண்டும். இதன் மூலம் வழங்கப்படும் சான்றிதழ்கள் மத்திய, மாநில அரசுகளால் அங்கீரிக்கப்பட்டவை.

இதில் சேர்ந்து படிக்கும் மாணவர்களுக்கு வாரம்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலோசனை வகுப்புகள் சிறந்த பேராசிரியர்களைக் கொண்டு நடைபெறும். மேலும் விவரங்கள் அறிய கல்வி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் சுதாகரன் 9940861202 மற்றும் கைலாசம் 9942850720 ஆகியோரை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என கல்லூரி நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.